**அறிவாற்றல் கருமையத்தின் அடிப்படையாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் செயற்திட்டம் (ரீஎஸ்ஈபி) – மாகாண மட்டம் - 2014**

அறிவாற்றல் கருமையத்தின் அடிப்படையாகப் பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 5037 எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் II பீ(3) ஆம் பிரிவுடனும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அவுஸ்ரேலியா நம்பிக்கை நிதியம் மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூலை 18 ஆந் திகதிய ரீஎவ் 013267 ஆம் இலக்க அவுஸ்ரேலியா மானிய உடன்படிக்கையின் II பீ(3) ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதியளிப்பு மற்றும் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், தேசிய மட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகள் கல்வி அமைச்சால் மாகாண மட்டத்தில் நடவடிக்கைகள் சகல மாகாணங்களாலும் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட அதேநேரம் மாகாண கல்வி அமைச்சுக்களாலும் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இந்த அறிக்கையானது மாகாண மட்டத்தில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சும் மற்றும் மாகாண கல்வி அமைச்சு போன்றவற்றால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களைக் கொண்டுள்ளது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன.**

செயற்திட்ட நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டமானது நாட்டின் பொதுக் கல்வித் துறை முகம் கொடுக்கும் சவால்களை எதிர்த்து கல்வித்துறை அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2012 – 2016 ஐ அமுலாக்குவதற்கு நிதி உதவி வழங்குவதற்கு அமுலாக்கப்பட்டுள்ளன. இலங்கையின் அறிவாற்றலிற்கு பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான அடிப்படையொன்றை வழங்குவதற்கு ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் நுழைவு மற்றும் தரத்தினை உயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிதியளிப்பு மற்றும் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 11,000 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 64.1 மில்லியன் (ஐ.அ.டொலர் 100மில்லியன்) கடன்பெறுகைகள் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தாலும் ஐ.அ.டொலர் 11.13 மில்லியன் மானியம் அவுஸ்ரேலியா நம்பிக்கை நிதியத்தாலும் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. அதில் 70 சதவீதமான நிதிகள் மாகாண கல்வி அதிகாரிகளிற்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி 30 சதவீதம் கல்வி அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 2012 ஒக்தோபர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. மானியத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் 2016 ஏப்ரல் 30 அளவில் பூர்த்தி செய்ய வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது

கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஈ) திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கைகள் நிதிப் பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2014 திசெம்பர் 01 ஆந் திகதிய 239/2014 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றுக்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஊ) நிதியளிப்பு மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கி இருந்தனவா என்பதும், ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

----------------------

### 2.1 அபிப்பிராயம்

----------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கான ஒன்பது மாகாண சபைகளின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 2014 திசெம்பர் 01 ஆந் திகதிய 239/2014 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகள் திறைசேரி கணனி அச்சீட்டுத்தாள்கள் மற்றும் வருடாந்த மதிப்பீடு மற்றும் ஒன்பது மாகாண சபைகளால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகள் மற்றும் பதிவுகளுடன் இணங்கியிருந்தது. கடன் மற்றும் மானிய பெறுகைகளில் ஏற்பட்ட செலவினங்கள் 2014 ஆம் ஆண்டிற்காக ஒன்பது மாகாண சபைகள் மற்றும் செயற்பாட்டு மற்றும் மேற்பார்வை உதவி பிரிவின் ஒதுக்கீட்டு கணக்குகளில் காலக்கிரமத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) நிதியளிப்பு மற்றும் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

------------------------------------------------------

### 3.1 நிதிகளின் பயன்பாடு

----------------------------

செயற்திட்டத்தினுடைய ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளின் பிரகாரம், சகல மாகாண சபைகளின் மாகாண கல்வி அமைச்சுக்கள் மற்றும் செயற்பாடு மற்றும் கண்காணிப்பு பிரிவு என்பவற்றால் சகல நிதி மூலங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டத்தின் மொத்தக்கிரயம் ரூபா 94.393 மில்லியன் ஆகும். கல்வித்துறையின் பாதீட்டு மதிப்பீட்டிற்கு உதவுவதற்கும் மற்றும் அவுஸ்ரேலியாவின் நம்பிக்கை நிதியத்திலிருந்தும் மீளாய்வாண்டின் போது சர்வதேச அபிவிருத்தி சங்கம் பெறப்பட்ட நிதியங்களிற்கான நிதியளிப்பு மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | நிதி உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் 2014 ஆம் ஆண்டின் போது | | பயன்படுத்தப்பட்ட நிதிகள் 2014 திசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடீஏ | 59 | 7,670 | 2,430 | 14 | 1,883 | 34 | 4,325 |
| ஏயூஎஸ்ஏஐடீ | 11 | 1,430 | 550 | 4 | 522 | 13 | 1,657 |
| | 70 | 9,100 | 2,980 | 18 | 2,405 | 47 | 5,982 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

நிதி உடன்படிக்கையின் பட்டியல் 01 இன் பிரகாரம் செயற்திட்டமானது ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியினை ஊக்குவித்தல் செய்முறை கல்வியின் தரத்தை முன்னேற்றுதல் மற்றும் கல்வியின் தரம் மற்றும் வழங்கலை வலுப்படுத்தல் போன்ற 03 பிரதான நோக்கங்களின் கீழ் செலவு இணைப்பு குறிகாட்டிகளை அடைவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவது தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டமானது 135 மாகாண பாடசாலைகளில் மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களுக்கான கட்டிடங்களை நிர்மாணிப்பதாக திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய ஆய்வுகூட கட்டிடங்களின் சகல நிர்மாண வேலைகளும் கணிசமான அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) வடமத்திய மாகாணத்திலுள்ள 15 மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்காக செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படடிருக்கவில்லை என அவதானிக்பட்டிருந்தது. மேலும், அத்தகைய சொத்துக்களின் உத்தரவாத காலமும் காலாவதியாகியிருந்தது. இதற்கு மேலதிகமாக, பொருத்தமான வழங்குநர்களை தெரிவு செய்வதிலும் அவர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதிலும் பல குறைபாடுகள் காணப்பட்டமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 9 மஹிந்தோதய தொழில்நுடப ஆய்வு கூடங்களிற்காக ரூபா 60,372,500 கிரயத்திலான 589 கணனிகளின் கொள்வனவு நடைமுறை இடையூறாகவும் அரச கொள்வனவு வழிகாட்டல்களில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாகவும் பிரயோகிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால் மாகாண சபைகளால் ரூபா 7,961,513 தொகை மேலதிகமாக செலுத்தப்பட வேண்டியிருந்தது.

(iii) கிழக்கு மாகாணத்திலுள்ள 15 பாடசாலைகளில் மஹிந்தோதய ஆய்வு கூடங்களின் நிர்மாண பணிகள் பூர்த்தி செய்ப்பட்டிருந்த போதிலும் 02 ஆய்வு கூடங்கள் மாத்திரமே 2015 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு மாணவர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டிருந்தது. ஏனைய ஆய்வுகூடங்கள் அறைகளை உருவாக்குவதற்காக இடித்து தகர்த்துவதற்காக ஒரு வருடத்திற்கு மேலதிகமாக மூடப்படடிருந்தன. ஆகையால் ரூபா 58,114,331 பெறுமதியான தளபாடம் மற்றும் உபகரணங்கள் ரூபா 24,527,750 பெறுமதியான 325 கணனிகள் பயன்படுத்தப்படாது இருந்ததுடன் அத்தகைய சொத்துக்களின் உத்தரவாதக் காலமும் காலாவதியாகியிருந்தது.

(iv) 2014 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், செயற்திட்டமானது ரூபா 37,131,240 கிரயத்தில் 492 கணனிகளை கொள்வனவு செய்திருந்ததுடன் அத்தகைய கணனிகளில் 39 கணனிகள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் கிழக்கு மாகாணத்தின் மாகாண கல்வித் திணைக்களத்தின் களஞ்சிய வளவில் பயன்படுத்தப்படாமல் இருந்தது. இதற்கு மேலதிகமாக கணனிகள் கொள்வனவிற்காக மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகளில் குறிப்பிடப்பட்ட 03 வருட உத்தரவாத காலம் 01 வருட காலமென ஒப்பந்த உடன்படிக்கைகளில் வித்தியாசமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) கல்வி அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின்போது வடமத்திய மாகாணத்திலுள்ள இரண்டாம் நிலை பாடசாலைகளிலுள்ள 200 அதிபர்களையும் 300 உப அதிபர்களையும் பயிற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 306 அதிபர்கள் மற்றும் உப அதிபர்கள் மாத்திரமே பயிற்றுவிக்கப்பட்டிருந்தார்கள்.

(இ) மீளாய்வாண்டின் போது வடக்கு மாகாணத்தின் மாகாண கல்வித் திணைக்களத்திற்காக பெறப்பட்ட ரூபா 288,468,038 தொகையான மொத்த பெறுகைகளில் ரூபா 183,447,367 தொகையானது குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும், வட மாகாணத்தில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டின்போது ரூபா 20,460,000 கிரயத்தில் அமுலாக்க வேண்டிய செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நிதியின்மை காரணமாக கைவிடப்பட்டிருந்தது. வட மாகாணத்தில் செயற்திட்டத்தால் 2013 இல் ஆரம்பிக்கப்பட்ட 13 நிகழ்ச்சித்திட்டங்களின் நடவடிக்கைகள் 2015 யூலை 31 இல் உள்ளவாறு 28 சதவீதத்திலிருந்து 69 சதவீத வரையான வீச்சில் பௌதீக முன்னேற்றத்தை அறிக்கையிட்டிருந்தது.

(ஈ) வடமத்திய மாகாணத்திலுள்ள 30 முறைசாரா கல்வி பிரிவுகளின் கட்டிடங்களின் அவசர திருத்தங்களை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,800,000 தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அத்தகைய வேலைகளை அமுலாக்குவதற்கு 2014 திசெம்பர் 31 வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், திம்புலஹல, அனுராதபுர, கலென்பிந்துனுவெவ, கெக்கிராவ, தம்புத்தேகம, ஹிங்குராங்கொட மற்றும் பொலன்நறுவையிலுள்ள கல்வி வலயங்களில் மேற்கொள்ளப்பட்ட விரிவான கணக்காய்வில் திறமையுள்ள ஆசிரியர்கள் இல்லாமையால் முறைசாரா கல்விப்பிரிவுகளில் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படாமையால் அத்தகைய பிரிவுகளின் பயன்பாட்டிற்காக செயற்திட்டத்தால் 2012 - 2014 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்தது என வெளிப்பட்டது.

### 3.3 நிதிக்கட்டுப்பாடு தொடர்பான விடயங்கள்

செயற்திட்ட காலப்பகுதியின் போது செயற்பாட்டு மற்றும் கண்காணிப்பு உதவிப் பிரிவின் பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7,402,528 பெறுமதியான சொத்துக்களை மெய்மையாய்வு செய்வதற்கு கணிப்பீட்டுச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.